

விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக இளைஞரணி சார்பில் திண்டிவனத்தில் நடைபெற்ற என் உயிரினும் மேலான கலைஞர் நூற்றாண்டுபேச்சு போட்டியில்பங்கேற்ற கல்லூரி மாணவர்களுக்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் சால்வை அணிவித்துபரிசுகள் வழங்கி வாழ்த்து தெரிவித்தார் .உடன் மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த்மற்றும் துணை அமைப்பாளர்கள் உள்ளனர்.

### விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில்

# திண்டிவனத்தில் கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்!

திண்டிவனம் ஆக 18.

பேச்சு போட்டியில் ஏராளமான கல்லூரி மாணவ மாணவிகள் ஆர்வமுடன் பங்கேற்று தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு பிறந்தநாளை முன்னிட்டு நூறு இளம் பேச்சாளர்களை தலைமைக்கு தேர்வு செய்து தருமாறு கழக தலைவர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கழக இளைஞரணி யைஅறிவுறுத்தி இருந்தார்.

அந்த வகையில் என் உயிரினும் மேலான என்ற தலைப்பில் பேச்சுப் போட்டிகள் அறிவிக்கப்பட்டு தமிழ்நாடு முழுவதும் 17 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் விண்ணப்பித்தனர்.

இந்நிலையில் விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக இளைஞரணி சார்பில்என் உயிரினும் மேலான கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி திண்டிவனத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர் தலைமை தாங்கினார்.

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் டி. கே. பி .ரமேஷ், உதயகுமார் ,எம்.டி. பாபு, அண்ணாமலை, விஜயகுமார் ஆகியோர் முன்னிலையில்

விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த் ஏற்பாட்டில் நடைபெற்ற என் உயிரினும் மேலான பேச்சுப் போட்டியை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்.

தலைமை கழக பேச்சாளர்கள் நெல்லிக்குப்பம் புகழேந்தி ,கோவி லெனின், குடியாத்தம் புவியரசி ஆகியோர் நடுவராக பங்கேற்ற பேச்சு போட்டியில்

என்றென்றும் பெரியார் ஏன்? அண்ணா கண்ட மாநில சுயாட்சி கலைஞரின் தொலைநோக்கு பார்வை மானமிகு சுயமரியாதைக்காரர் கலைஞர் நவீன தமிழ்நாட்டின் சிற்பி இந்தி திணிப்பை என்றும் எதிர்ப்போம்

சமூக நீதி காவலர் கலைஞர் தமிழ்நாட்டு குடும்பங்களில் திமுக பேசி வென்ற இயக்கம் திராவிட மாடல் நாயகர் முதல்வர் மு. க .ஸ்டாலின் உள்ளிட்ட 10 தலைப்புகளில் நடைபெற்ற பேச்சு போட்டியில் 500க்கும்மேற்பட்ட கல்லூரி மாணவ மாணவிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர்.

பேச்சுப் போட்டியில் கலந்து கொண்ட மாணவ மாணவிகளுக்கு அமைச்சர் செஞ்சி மஸ்தான் சால்வை அணிவித்து பரிசுகள்வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், சீத்தாபதி சொக்கலிங்கம், மாவட்ட பொருளாளர் ரமணன், துணைச் செயலாளர் ரவிக்குமார், நகர செயலாளர் கண்ணன், மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன், துணை சேர்மன் பழனி,நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன். செயற்குழு உறுப்பினர் சீனி ராஜ், பொதுக்குழு உறுப்பினர் கதிரேசன்,நகர மன்ற உறுப்பினர்கள், திமுக நிர்வாகிகள், அணி அமைப்பாளர்கள் உள்ளிட்டோர் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திருச்சி தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில், முத்தமிழ் அறிஞர் கலைஞரின் மனசாட்சியாகவும் முன்னாள் மத்திய அமைச்சராகவும் பதவிவகித்த முரசொலி மாறன் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு தெற்கு மாவட்ட கழக செயலாளர் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன் முன்னிலையில் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். இந்நிகழ்வில் மாவட்ட கழக நிர்வாகிகள் வண்ணை அரங்கநாதன், சேகரன், சபியுல்லா, செந்தில், பகுதி செயலாளர் மோகன், அணிகளின் அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




வடகோவை கிராஸ்கட் சாலையில் உள்ள கோவை மாவட்ட திமுக அலுவலகத்தில் கலைஞரின் மனசாட்சி என்று அன்புடன் அழைக்கப்பட்ட முரசொலி மாறன் அவர்களின் 91 வது பிறந்த நாளை முன்னிட்டு கோவை மாநகர் மாவட்ட திமுக செயலாளர் நா.கார்த்திக் ex.எம்எல்ஏ. அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில்,கோவை மாநகராட்சி மேயர் இரா.ரங்கநாயகி,மாநகர் மாவட்ட துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், கல்பனா செந்தில், மாநகர் மாவட்ட பொருளாளர் முருகன்,கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ.தமிழ்மறை, கழக தொழிலாளர் அணி துணைச் செயலாளர் lpf தமிழ்செல்வன், பொதுக்குழு உறுப்பினர்கள் தங்கம் சந்திரசேகர், பெரியகடை வீதி பகுதி1 செயலாளர் மார்க்கெட் எம்.மனோகரன், பீளமேடு பகுதி1 செயலாளர் துரை செந்தமிழ்ச் செல்வன், வடவள்ளி பகுதி செயலாளர் வ.ம.சண்முகசுந்தரம், மாநகர் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் தொழிலாளர் அணி கே.ஆர். ராஜா, ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் டெம்போ சிவா,ஆர்.கே.சுரேஷ்குமார், சிறுபான்மையினர் நலக்குழு அமைப்பாளர் இலா. தேவசீலன், இலக்கிய அணி ராஜ்குமார், அயலக அணி கண்ணன்,மகளிரணி சி.வி.தீபா, மகளிர் தொண்டரணி சி.ஆர்.கனிமொழி,lpf பெரியசாமி, வழக்கறிஞர் கணேஷ் குமார், lpf ஆட்டோ ப.வணங்காமுடி,வட்டக் கழகச் செயலாளர்கள் எஸ்.போஸ்,கமலாவதிபோஸ் mc.,திருநாராயணன்,கோவை அருண்,சாரமேடு இஸ்மாயில், ஆர்.ஆர்.மோகன்குமார், சந்திரசேகர்,ஆர்.எஸ்.புரம் பூபாலன்,வசந்தி,கழக நிர்வாகிகள் கழக உடன்பிறப்புக்கள் கலந்து கொண்டனர்.

### பெரம்பலூர் மாவட்டத்தில்

# சுதந்திர திருநாள் விழா!

## கே.என்.அருண் நேரு எம்.பி. பங்கேற்பு!

பெரம்பலூர், ஆக.19-

பெரம்பலூர் மாவட்டம் இந்திய நாட்டின் சுதந்திரத் திருநாள் விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் கிரேஸ் பச்சாவ் தேசியக்கொடியை ஏற்றி வைத்து, காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்! பாராளுமன்ற உறுப்பினர் கே.என். அருண்நேரு சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் கலந்து கொண்டு தியாகி களின் வாரிசுதாரர்களை சிறப்பு செய்து, 374 பயனாளிகளுக்கு ரூ.3.30 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

பெரம்பலூர் மாவட்டத்தில் சுதந்திரத்திருநாள் விழாநிகழ்ச்சிகள்மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகத்தில் உள்ள விளையாட்டரங்கில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் கிரேஸ் பச்சாவ் தேசிய கொடியை ஏற்றி வைத்து, காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆதர்ஷ்பச்சேரா,மாவட்ட வருவாய் அலுவலர் மு. வடிவேல் பிரபு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பெரம்பலூர் பாராளுமன்ற உறுப்பினர் கே.என். அருண்நேரு, பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர், பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் தியாகிகளின் வாரிசுதாரர்களுக்கு பொன்னாடை அணிவித்து மரியாதை செலுத்தினர். சமாதானத்தை குறிக்கும் வகையில் வெண்புறாக்களை யும், தேசிய கொடி நிறத்திலான பலூன்களையும் பறக்க விட்டனர்.

தொடர்ந்து, காவல்துறையில் சிறப்பாக பணிபுரிந்த 31 காவலர்களுக்கு பதக்கங்களையும், பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இதில் ஆயுதப்படை ஆய்வாளர் ஜெ.தங்கபாண்டி தலைமையில் முதலாம் படைப்பிரிவிற்கு ஆயுதப்படை உதவி ஆய்வாளர் என்.சந்திரபோஸ், இரண்டாம் படைப்பிரிவிற்கு ஆயுதப்படை உதவி ஆய்வாளர் ஏ.சீமான், மூன்றாம் படைப்பிரிவிற்கு ஆயுதப்படை உதவி ஆய்வாளர் எம்.பிரசன்னா, தீயணைப்பு படைக்கு தீயணைப்பு நிலைய அலுவலர் ஆர். பூபதி, ஊர்காவல் படைக்கு உதவி படைப்பிரிவு தளபதிகள் யூ.ஆல்பர்ட், ராணி ஆகியோர் தலைமையேற்று வழிநடத்தி சென்றனர்.

பின்னர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் சார்பில் 86 பயனாளிகளுக்கு ரூ.64,07,000 மதிப்பீட்டிலும், முன்னாள் படைவீரர் நலத்துறையின் சார்பில் 02 பயனாளிக்கு ரூ.40,000 மதிப்பீட்டிலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் 10 பயனாளிகளுக்கு ரூ.66,900 மதிப்பீட்டிலும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் 14 பயனாளிகளுக்கு ரூ.71,262 மதிப்பீட்டிலும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 01 பயனாளிக்கு ரூ.7,900 மதிப்பீட்டிலும், வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் 06 பயனாளிகளுக்கு ரூ.17,60,000 மதிப்பீட்டிலும், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் சார்பில் 02 பயனாளிகளுக்கு ரூ.1,24,960 மதிப்பீட்டிலும், மாவட்ட நீர்வடிப்பகுதி முகமை சார்பில், 01 பயனாளிக்கு ரூ.8,000 மதிப்பீட்டிலும், தோட்டக்கலைத் துறையின் சார்பில் 1 பயனாளிக்கு ரூ.2,00,000 மதிப்பீட்டிலும், தாட்கோ மூலம் 03 பயனாளிகளுக்கு ரூ.30,00,000 மதிப்பீட்டிலும், தொழிலாளர் நலத்துறையின் சார்பில் 15 பயனாளிகளுக்கு ரூ. 15,90,000 மதிப்பீட்டிலும், மாவட்ட தொழில் மையம் சார்பில், 02 பயனாளிகளுகுகு ரூ.21,63,901 மதிப்பீட்டிலும், கூட்டுறவுத் துறையின் சார்பில் 50 பயனாளிகளுக்கு ரூ.36,69,500 மதிப்பீட்டிலும், மீன்வளத் துறையின் சார்பில் 7 பயனாளிகளுக்கு ரூ.5,25,000 மதிப்பீட்டிலும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் 174 பயனாளிகளுக்கு ரூ.1,33,47,000 மதிப்பீட்டிலும் என மொத்தம் 374 பயனாளிகளுக்கு ரூ.3,29,81,423 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர், பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் வழங்கினார்கள்.

பின்னர் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, பேரூராட்சிகள் துறை, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, கூட்டுறவுத் துறை, பள்ளிக்கல்வித் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்த 288 அரசு அலுவலர்களுக்கு சிறப்பாக பணியாற்றியதற்காக பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

பின்னர், குரும்பலூர் அரசு மேல்நிலைப் பள்ளி, லெப்பைக்குடிக்காடு பெண்கள் அரசு மேல்நிலைப் பள்ளி, புனித தோமினிக் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, திருமாந்துறை புனித ஆன்ட்ருஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, பெரம்பலூர் ஸ்ரீகௌதம புத்தர் சிறப்பு உயந்நிலைப் பள்ளி, பெரம்பலூர் கேந்திரிய வித்யாலயா பள்ளி ஆகிய 06 பள்ளிகளிலிருந்து சுமார் 600 மாணவ, மாணவிகள் கலந்து கொண்ட கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், சார் ஆட்சியர் சு.கோகுல், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் தேவநாதன், நகர் மன்ற தலைவர் அம்பிகா ராஜேந்திரன், துணைத்தலைவர் து.ஆதவன்(எ)ஹரிபாஸ்கர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) வைத்தியநாதன் உள்ளிட்ட அனைத்து துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள், மாணவ மாணவிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் 91வது பிறந்தநாளை முன்னிட்டு புதுடெல்லியில் நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள முரசொலி மாறன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா உள்ளார்.



கும்பகோணம் சட்டமன்ற தொகுதி, நீரத்தநல்லூர் ஊராட்சியில், மாநில நிதிக்குழு மானியம், மாவட்ட ஊராட்சிக்குழு நிதியிலிருந்து, ரூபாய் 12 லட்சத்து 30 ஆயிரம் மதிப்பீட்டில், புதிதாக கட்டப்பட்ட பொது விநியோக மையக் கட்டிடத்தை, கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன், பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். நிகழ்ச்சியில், கும்பகோணம் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் ஜெ.சுதாகர், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் மார்க்கெட் சி.சங்கர், வட்டார வளர்ச்சி அலுவலர் நா.சிவக்குமார், ஒன்றிய அவைத்தலைவர் எல்.செல்வராஜ், துணைச் செயலாளர் க.நேரு, மாவட்ட பிரதிநிதிகள் ஜெ.சுரேஷ், ஆர்.எஃப்.இஸ்ரேல், பகுதி திமுக செயலாளர் ராஜா (எ) பிரவின்ராஜ், முருகேசன், மகா மூர்த்தி, ஊராட்சி மன்ற தலைவர்கள் மரகதம் கோவிந்தராஜ், ஜெயசீலா அறிவழகன், மரகதம் சாமிநாதன், துணைத் தலைவர் பார்வதி ராமன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ராஜேந்திரன், சோழபுரம் பேரூர் திமுக துணைச் செயலாளர் ஆர்.கே.செல்வமணி, எஸ்.ஜெயராமன், குணசேகரன், மகாலிங்கம், இளமாறன், சரபோஜி, சேகர், காசிநாதன், யோகநாதன் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில்

# கதிர் ஆனந்த் எம்.பி. வாக்காளர்களுக்கு இன்று நன்றி தெரிவிக்கிறார்!



மதச்சார்பற்ற முற்போக்கு இந்தியா கூட்டணியின் சார்பில் போட்டியிட்டு வேலூர் நாடாளுமன்ற தொகுதியில் வெற்றி பெற்றுள்ள கதிர் ஆனந்த் எம்.பி. (19.08.2024, திங்கள் கிழமை) கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரலின்படி வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்க உள்ளார்.

**வேலூர் மாவட்டம்**
**குடியாத்தம் சட்டமன்றம் குடியாத்தம் தெற்கு ஒன்றியம்**

| ஊராட்சி | நன்றி தெரிவிக்கும் இடம் | நேரம் காலை |
|---|---|---|
| உள்ளி | ஆத்தோரம்பட்டி | 8.00 மணி |
| சின்னதோட்டாளம் | சின்னதோட்டாளம் | 8.30 மணி |
| குளிதிகை | சாந்திநகர் | 9.00 மணி |
| கீழ்பட்டி | பேருந்து நிறுத்தம் (மேல்பட்டி ரோடு) | 9.30 மணி |
| வளத்தூர் | பேருந்து நிறுத்தம் (மேல்பட்டி ரோடு) | 10.00 மணி |
| கருணீகசமுத்திரம் | பேருந்து நிறுத்தம் (மேல்பட்டி ரோடு) | 10.30 மணி |
| எர்த்தாங்கல் | கெங்கையம்மன் கோயில் அருகில் | 11.00 மணி |
| | **குடியாத்தம் மேற்கு ஒன்றியம்** | |
| சேம்பள்ளி | பஸ் நிலையம் | 11.30 மணி |
| அக்ராவரம் | பிள்ளையார் கோயில் பஸ் நிலையம் | 11.45 மணி |
| பெரும்பாடி | பெரும்பாடி பஸ் நிலையம் | 12.00 மணி |
| மூங்கப்பட்டு | மூங்கப்பட்டு | 12.15 மணி |
| சீவூர் ஊராட்சி | நேரு நகர், ஆலியார் தெரு | 12.30 மணி |
| | **குடியாத்தம் நகரம்** | |
| | நான்கு முனை கூட்ரோடு | மாலை 4.00மணி |
| | சித்தூர் கேட் | மாலை 4.30மணி |
| | கோபாலபுரம் மஜித் அருகில் | மாலை 5.00மணி |
| | நெல்லூர்பேட்டை காந்தி சிலை அருகில் | மாலை 5.30மணி |
| | அண்ணாசிலை அருகில் | மாலை 6.00 மணி |
| | பழைய பேருந்து நிலையம் | மாலை 6.30 மணி |
| | ஆர்.எஸ். சாலை, அம்பேத்கர் சிலை அருகில். | மாலை 7.00மணி |



தருமபுரி கிழக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி ஆலோசனைப்படி நகர செயலாளர் நாட்டான் மாது முரசொலி மாறன் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்தார்.இதே போல் பென்னாகரம் தெற்கு ஒன்றிய கழக அலுவலகத்தில் முன்னாள் மாவட்ட கழக செயலாளர் பி.என்.பி.இன்பசேகரன் முரசொலி மாறன் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.நிகழ்வுகளில் நகர் மன்ற தலைவர் லட்சுமி மாது,மற்றும் மாநில,மாவட்ட,ஒன்றிய,நகர,பேரூர் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.